Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 27 இதழ் - 2 பிப்ரவரி 2014

தனிப்பிரதி ரூ.10/-



**மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது.**

**வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான்.**

**( சங்கீதம் 103 : 15 )**

ஜெபியுங்கள் ! பங்குபெறுங்கள் !

# பதினேழாம்

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

ஈரோடு – சென்னை இரயில் மார்க்கத்தில்,

ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து, சுமார் 30 கி.மீ.

**நாள் : மே, 5,6, 7, - 2014 ( திங்கள், செவ்வாய், புதன் )**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 250 /-

சிறியவர்கள் ரூ. 150 /-

உணவும், தங்குமிடமும் இலவசம்

### ஆசானின் அறிவுரையிலே....


1. நிறுவன ஆசிரியர் உரை............................1
2. ஏன் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை.... 5
3. பெண்கள் பகுதி........................................10
4. வாலிபர் பகுதி...........................................13
5. சிறுவர் பகுதி.............................................16
6. ஒருபோதும் யாருக்கும் உதவ...................18
7. பட்டணம் ........................20
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை...........22
9. அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ........................25
10. விசுவாசமா அல்லது உணர்வா?............27
11. ஆராதனையும், பொழுது போக்கும்.........31


★ ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

☆ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ மணியார்டர் செய்யும் பொழுது உங்கள் அலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 27 FEBRUARY - 2014 Issue - 2**


நிறுவன ஆசிரியர் உரை

## கைகளோ ஏசாவின் கைகள்; சத்தமோ யாக்கோபின் சத்தம்

தற்காலத்தில் மக்கள் மத்தியில் மாபெரும் பக்திப் பரவசம் ஏற்பட்டு விட்டதோ என்று எண்ணத்தோன்றும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் நற்செய்திக் கூட்டங்கள். வீதிக்கு வீதி தெருப் பிரசங்கங்கள், ஆலயங்கள் தோறும் மக்கள் வெள்ளம், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் நாள்தோறும் பல்வேறு கூட்டத்தினரின் செய்திகள். இப்படிப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் பாராட்டத்தக்க நல்ல அம்சங்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவைகளால் நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு நன்மைகள் ஏற்பட்டு வருகிறதா? மற்ற மதத்தினர் அஞ்ஞான இருளில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், அந்த மக்கள் நம்முடைய பக்திமுறைகளைப் பற்றி என்ன அபிப்பிராயப்படுகின்றனர். மதமாற்றத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் கூறுகிற உண்மையென்ன? " அப்படி மதம் மாற்றப்பட்டவர்கள் உண்மையிலேயே மனம் மாற்றம் பெற்றிருக்கிறார்களா? என்று சிந்திக்கத் தலைப்பட்டால் நாம் விரும்புகிற அளவுக்கு திருப்திகரமான பதில் கிடைக்காது; பாவக்கறைகள் நீங்கி இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்று சுயதிருப்திப்பட்டுக் கொள்ளும் நம் கிறிஸ்தவ மக்களுடைய வாழ்க்கையை வினயத்தோடும், வியப்போடும் கூர்ந்து கவனித்துப் பார்க்கும் மனிதன், இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு இருக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகின்ற நற்பண்புகளைத் துருவித் தேடிப்

பார்த்தும் காண முடியாமல் ஏமாற்றத்தோடும், வெறுப்போடும் திரும்பச் செல்ல வேண்டிய நிலை தான் உள்ளது ". "மாயக்காரராகிய வேதபாதகரே! பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குறீர்கள் " (மத். 23:15) என்று இயேசு ஆண்டவர் உரைத்தது எவ்வளவு உண்மை!!

ஆம், சகோதரர்களே! எங்கும் எதிலும் போலித்தனம் பரவி விட்டதைக் காணும்போது நமக்கே மிகுந்த மனவேதனை ஏற்படு கிறது என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எப்படியிருந் திருக்கும்? வஞ்சகப் பிசாசின் சூது மதியால் பிதாவாகிய தேவனோடு மானிடர் கொண்டிருக்க வேண்டிய நல்லுறவை இழந்து பாவத் திலும், துக்கத்திலும், கண்ணீரிலும் சிக்கித் தங்களுடைய வாழ்க்கையில் நிம்மதியிழந்து அவதியுறும் மக்களின் துயர் துடைத்துக் கரையேறு வதற்கென்றே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். (லூக். 19:10) விண்ணு லகில் தேவனுக்கு சமமாக சகல சிறப்புகளையும் பெற்றிருந்தும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு ஏழையின் வயிற்றிலே பிறந்து, தாழ்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். (பிலி. 2:6,8) இன்னல்கள் பலபட்டு இன்னுயிரைக் கொடுத்து இவ்வுலக மக்களை இரட்சிக்க வேண்டும் என்றே உதித்த இயேசு பெருமான் மனம் இப்படி வேதனையடைவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

வாரினால் அடித்தார்கள் வாய் திறக்கவில்லை, தலையிலே குட்டி, முகத்திலே துப்பி ஏளன சிரிப்புச் சிரித்தனர் எரிச்சலடைய வில்லை. தாகத்தால் நாவறண்டு தண்ணீர் கேட்டார். கசப்புக் கலந்த காடியைக் கொடுத்தார்கள், கடுமொழி ஒன்றும் கூறிடவில்லை. பொன் மகுடம் சூட்டவேண்டிய தலையில் முள்முடி, முட்கள் அழுத்தியதால் குருதி கொட்டுகிறது குமுறி அழவில்லை. பாரச் சிலுவையைச் சுமக்க முடியாமல் கால்கள் பின்னுகின்றன, காரணம் கேட்கவில்லை. நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்தவரின் கால் களிலும் கரங்களிலும் ஆணிகள், நா அசைத்தார், சபிக்கவல்ல பிதா வினிடத்தில் அவர்களுக்காக மன்னிப்புக் கேட்டு மன்றாட.

தன்னைச் சித்திரவதை செய்த மக்களின் அறியாமையை மன்னிக்க வேண்டும் என்று மன்றாடுகிற இம்மகான் பரிசேயரையும், வேதபாரகரையும் பார்த்து " குருட்டு வழிகாட்டிகள் " என்கிறார். "வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை " என்கிறார். " சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே " என்கிறார். அப்பப்பா! எவ்வளவு கடுமை! ஏன் அவர்கள் மீது மாத்திரம் ஆண்டவருக்கு அவ்வளவு கோபம். சொல்லப் போனால் மற்ற பிரிவைச் சேர்ந்த யூதர்களைக் காட்டிலும் இவர்கள் நியாயப்பிரமாணத்தை முறையாகக் கற்றவர்கள். நியாயப்பிரமாணத்தின்படி மிகவும் கவனமாக நடப்பவர்கள், இருந்தும் அவர்களையே குறிவைத்துத் தாக்குகிறாரே!

சமுதாயத்தின் உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கும் இந்த பெரிய மனிதர்களின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் ஆளானால் தன் உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று தெரிந்தும், சமயம் கிடைத்த

போதெல்லாம் சாட்டையடி கொடுப்பது போல சாடுகிறாரே, ஏன்? ஏன்? ஏனெனில், அவர்களுடைய தவறுகளை அவர்கள் உணர மறுத்து, போலி பக்தியில் மோகங் கொண்டதோடு, தேவனுடைய ஆலோசனைகளையும் அறிந்து கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்தார்கள். வெளிவேஷத்தில் பிரியப்பட்டார்கள். வெளியிலே பார்ப்பவர்களுக்கு பக்திமான்களைப் போலவும், கடவுளின் உண்மைத் தொண்டர்களைப் போலவும், மாயமான தாழ்மையுடன் பாசாங்கு செய்தார்கள். ஆனால், எல்லாவிதமான அக்கிரமங்களையும் கூசாமல் நடப்பித்துக் கொண்டு தேவனுடைய ஆலோசனைக்குச் செவிகொடாமல் தங்களுடைய செல்வாக்கையும், செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதில் கவனமுள்ளவர்களாக இருந்தார்கள். இவைகளே அவருடைய ஆத்திரத்துக்குக் காரணம். இயேசு கிறிஸ்துவின் இனிய பண்புகளுக்கும், இரக்க சுபாவத்துக்கும் முற்றிலும் முரண்பாடான முறையில் அத்திரமரம் ஒன்றைச் சபிப்பதை மத்தேயு, மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம் (மத். 21:18,32; மாற்கு 11:12–14) ஏன் அதைச் சபித்தார்? என்னுடைய பசியைப் போக்குவதற்குப் பயனில்லாத மரம் நாசமாகட்டும் என்று சபித்திருப்பாரா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. பிசாசினால் வனாந்திரத்திலே சோதிக்கப்பட்ட நேரத்தில் நாற்பது நாள் இரவு பகல் பட்டினியைச் சகித்துக் கொண்டு மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று தெளிவாய்க் கூறினவர், சமாரிய நாட்டுச் சீகார் என்னும் சிற்றூரில் வயிற்றுக்குத் தேவையான உணவை விட என்னை அனுப்பினவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதுதான் சிறந்த உணவு என்று கூறி பசியை மறந்து தெய்வத்திருப்பணியில் ஈடுபட்டவர் (யோவான் 4:31). கேவலம் தனக்குப் பயன்தராதது அழிந்தொழியட்டும் என்ற கீழ்த்தரமான வாழ்க்கை நெறியாளர்களுடைய நிலைக்குத் தாழ்ந்து விடுவாரா? சர்வ நிச்சயமாக இருக்கவே இருக்காது.

பொறுமைக்கும், சகிப்புத் தன்மைக்கும், சாத்வீகத்துக்கும் உறைவிடமான நமது கர்த்தர் " எடுத்தேன், கவிழ்த்தேன் " என்ற பாணியில் ஆத்திரமடைந்து சபித்திருப்பாரா? கற்பனை செய்து பார்க்க முடியாத குற்றச்சாட்டு இது. பின்னர் என்னதான் காரணமாக இருக்க முடியும்? தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது செழித்து வளர்ந்து பசுமையாகத் தோற்றமளித்த அந்த அத்திமரம், மரங்களின் சிறப்பு நிலையாகிய கனி கொடுக்கும் நிலையில் இல்லாதது தான் அவருக்கு ஆத்திரம் உண்டாக்கிய காரியம். தோற்றம் ஒன்று; நிலைமை வேறு; சொல் ஒன்று; செயல் வேறு. இதுதான் இரட்சகரின் கோபத்துக்கு காரணம். குற்றங்கள் குறைகள் இருப்பது மனித இயல்புதான். அது ஆண்டவருக்குத் தெரியாததல்ல. இல்லாத ஒன்றை இருக்கிறமாதிரி காட்டுகிற போலித்தனத்தையே கர்த்தர் வெறுக்கிறார்.


தேவனுடைய உன்னதமான நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற மக்களே! நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக்

கொண்டு அதன் பலனை மறுதலிக்கிறவர்களாக இருக்கிறோமோ? அல்லது நாம் இந்த உலகத்துக்கு வெளிச்சமாகவும் பூமிக்கு உப்பாகவும் இருக்கிறோமோ? தயவு செய்து சிந்தித்துப் பார்ப்போம். தேவன் அன்புள்ளவர், கிருபையுள்ளவர், இரக்கமுள்ளவர், பொறுமையுள்ளவர் என்பது மெய்தான். அதே நேரத்தில் நீதியுள்ளவர், பாரபட்சமில்லாதவர், எரிச்சலுள்ளவர் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. நம்மீது இரக்கமும் அன்பும் கொண்ட காரணத்தினால் தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்துக்குகத் தந்தருளினார் (யோவான் 3:16). நம்முடைய பலவீனங்களைப் புரிந்து கொண்டதினால் தான் நாம் அன்றாடம் செய்து வருகிற பலவிதமான தீச்செயல்களைப் பொறுமையோடு சகித்துக் கொண்டுவருகிறார். ஆனால், எல்லாவற்றுக்கும் ஒரு எல்லையும், ஒரு முடிவும் உண்டு என்பதை மறந்துவிடலாமா?

நம்மைக் காட்டிலும் சடங்காச்சாரங்களில் அதிக கவனம் செலுத்திக் கொண்டு, தங்கள் சுய நீதியில் பெருமை கொண்டு வாழ்ந்த பரிசேயர்களையே விட்டு வைக்காமலும், தயவு தாட்சண்யம் காட்டாமலும் சாடி, " மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள் " என்று சூடான அறிவுரை கூறுகிறார். எவ்வளவு தான் உறுதியுள்ளதாக இருந்தாலும், என்னதான் பசுமையான தோற்றமுள்ளதாக, இலைகள் நிறைந்ததாக காட்சியளித்த போதிலும், மரத்தின் தலையாய நிலை கனி கொடுப்பதுதான். அதுபோல ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு பக்தி முயற்சிக் காரியங்களில் ஈடுபாடு கொண்டு, என்னதான் ஆசீர்வாதங்களையும், வரங்களையும் பெற்றிருந்தாலும், தன்னுடைய வாழ்க்கையில் ஆவியின் கனிகளைத் தராத வரையில் அவனுடைய பக்தி வாழ்க்கை நிறைவு பெற்றதாகாது. தேவன் அங்கீகரிக்கும் வாழ்வை ஒருவன் விரும்பினால், அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், ஆகியவைகளைப் பெற்றிருக்க வேண்டும். சரியான அடிப்படையின் மேல் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை கட்டுகிற எவரும் மேற்சொன்ன கனிகளைப் பெற்றே ஆகவேண்டும். இவைகள் நம்மிடத்தில் காணப்படவில்லையென்றால் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏதோ கோளாறுகள் இருக்கின்றன என்று பொருள். தயவு செய்து கொத்தி எருப்போடுவோம், தண்ணீர் பாய்ச்சுவோம் தேவன் விளையச் செய்வார்.



" திருமறை ஆசான் " மாத இதழின் நிறுவன ஆசிரியரும், எனது அன்புத் தகப்பனுமாகிய E.Z. செல்வநாயகம் அய்யா அவர்கள் கர்த்தருக்குள் மரித்து, 09.02.2014 உடன் 21 ஆண்டுகள் முடிந்து விட்டது. அவர் நினைவாக இம்மாதம் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. – ஆசிரியர்.



# ஏன் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

**நா**ன் என்ன செய்கிறேனோ அதை நான் ஏன் செய்கிறேன் என்று நீங்கள் நம்புவதற்கு என்னிடத்தில் நிச்சயமான காரணங்கள் உண்டு. அவைகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை, நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசியாக இல்லாவிட்டால், நீங்களும் என்னைப் போல் ஒரு விசுவாசியாக மாறும்படி அவைகளை, உங்களிடத்தில் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். நிச்சயமாகவே, என்னுடைய விசுவாசத்தில் நான் தனி ஒருவனாக இல்லை. உலக முழுவதிலும் கிறிஸ்துவுக்குள் என்னைப் போல் விசுவாசிகளாயிருக்கிற எண்ணிலடங்கா சகோதர, சகோதரிகள் உண்டு. நாங்கள் எல்லோரும் ஒரே தேவனை, ஒரே கிறிஸ்துவை, ஒரே ஆவியை விசுவாசிப்பதால் நாங்கள் ஒரேவிதமான விசுவாசத்தைப் பெற்றிருக்கிறோம். இவைகள் எல்லாமே வேதாகமத்தில் அடங்கியிருக்கிற தேவனுடைய வார்த்தை களின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நம்முடைய பாடத்திற்கான இந்த வேளையில், பரிசுத்த ஆவியானவரை நாங்கள் ஏன் விசுவாசிக்கிறோம் என்பது பற்றியும், பரிசுத்த ஆவியானவரின் பணி பற்றியும் நாங்கள் உங்களுக்குச் சொல்லப்போகிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் மூன்றாம் நபராயிருக்கிறார். பவுல் எபே. 4:4-6 வசனங்களில் ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவி என்று அறிவித்திருக்கிறார். பவுல் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும் போது இப்படியாகச் சொன்னார். *"அந்தப்படியே நாம் இரு திறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்"* என்று (எபே. 2:18) மறுபடியும், தேவத்துவத்திலுள்ள மூவரும் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மத். 3:13-17 வசனங்களில் யோவான் ஸ்நானனால் இயேசு ஞானஸ்நானம் பெறும் சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிறது, அதை இப்போது வாசிக்கலாம்: *"அப்போது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமோ என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; இப்போது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது,*

*அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத் திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப் பட்டது; தேவ ஆவியானவர் புறாவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னு டைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக் கிறேன் என்று உரைத்தது".* இந்த சம்பவத்தை கவனித்துப் பாருங்கள். கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற போது, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல அவர் மேல் இறங்கி வந்தார். தேவன் தன்னுடைய குமாரனை அங்கீகரித்ததின் வெளிப்பாடாக வானத்தி லிருந்து பேசினார். அப்படியானால், நாம் தேவன் பேரிலும், கிறிஸ்து வானவர் அவருடைய குமாரன் என்பதிலும் நாம் விசுவாசம் வைத்தால், பரிசுத்த ஆவியானவரையும் நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் மறுபடியும் இப்படியாக வாசிக்கிறோம். "*பரலோகத்திலே சாட்சியிடு கிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்*" (1 யோவான் 5:7). இங்கே வார்த்தை என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது (யோவான் 1:1)

மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியாகி இயேசுவைப் பெற்றெடுத்தபடியால் நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக் கிறோம். நாம் மத். 1:18–ல் இப்படியாக வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதி யானாள் என்று. "*கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியா யிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது என்றான்*" (மத். 1:20). மரியாள் தேவதூதனை நோக்கி, இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவ தூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் *நிழலிடும். ஆதலால், உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்* (லூக். 1:35). வேறுவிதமாகச் சொன்னால், பரிசுத்த ஆவியின் கிரியையினால் தான் மரியாள் கர்ப்பவதியாகி தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை முதலில் பெற்றெடுத்தாள்.

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற வேத வாக்கியங்கள் எல்லாம் ஆவியின் சாட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது அல்லது அவைகள் எல்லாம் ஆவியின் வார்த்தைகளாயிருக்கிறது. எனவே, *நாங்கள் பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம். நூற்றுக்கணக் கான ஆண்டுகளுக்கும் மேலாக, ஆவியானவர் பல்வேறுபட்ட தேவ தாசர்களை மனிதனுக்கான தேவனுடைய சித்தத்தை எழுதும்படி ஏவினார். அதனால் தான் நாம்* II தீமோத். 3:16,17 வசனங்களில் இப்படியாக வாசிக்கிறோம். "*வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து*

*கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது*" என்று. வார்த்தையானது ஆவியும், ஜீவனுமாயிருக்கிறது; அது விடுதலையாக்குகிறது; (யோவான் 8:32) இது சத்தியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் காலத்திலும் அப்போஸ்தலர்களுடைய காலத்திலும் கிரியை செய்த விதத்தை வைத்து நாங்கள் பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய பணியையும் விசுவாசிக்கிறோம். கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "*தேவனால் அனுப்பப் பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்* " (யோவான் 3:34). இதன் பொருள், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுடன் வாசம் செய்தார் மற்றும் பரிசுத்த ஆவியை பயன்படுத்துவதற்கு கிறிஸ்துவுக்கு எல்லையேதும் இருக்கவில்லை. அதாவது, பரிசுத்த ஆவியானவரைக் கிறிஸ்து அளவில்லாமல் பெற்றிருந்தார் என்பதன் பொருள், மற்றவர்கள் பரிசுத்த ஆவியானவரை அளவுடன் தான் பெற்றிருந்தார்கள் என்று தெளிவாகிறது.

கிறிஸ்து தம்முடைய சீடர்களிடத்தில் ராஜ்யம் அல்லது சபை பலத்தோடே வரும் என்று வாக்குதத்தம் செய்திருந்தார் (மாற்கு 9:1). இது சபையானது பரிசுத்த ஆவியின் பலத்தோடே வரும் என்கின்ற உண்மையைத் தான் குறிக்கின்றது. பின்பு, கிறிஸ்து சீடர்களிடத்தில் தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார். இயேசு விரைவில் இந்த உலகத்தை விட்டுக் கடந்து செல்வதை அறிந்திருந்தார். மேலும், அப்போஸ்தலர்கள் மனிதர்களாக இருந்தபடியால் தவறு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே, அவர் சொன்ன யாவற்றையும் அவர்களுக்கு நினைப்பூட்டும்படி பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார். "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை நடத்துவார்", அவர் அவர்களுக்கு அந்நிய பாஷைகளில் பேசும் வல்லமையைக் கொடுப்பார், அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையைக் கொடுப்பார். யோவான் 15:26-ல் கிறிஸ்து, சத்திய ஆவியானவரை தேற்றரவாளன் என்று குறிப்பிடுகிறார். யோவான் 16:13-ல், பரிசுத்த ஆவியானவரை சத்திய ஆவியானவர் என்று குறிப்பிடுகிறார். ஆகவே, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் எல்லா காரியங்களுமே சரியாகச் செய்யப்பட்டு அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் வார்த்தை உறுதிப்படுத்தப்படும். இது கேட்கிறவர்களின் இருதயத்தில் விசுவாசத்தை உண்டாக்கும்.

கர்த்தருடைய மரணம், அடக்கம். உயிர்த்தெழுதலுக்குப் பின், பரலோகத்திலிருக்கிற தன் பிதாவினிடத்தில் திரும்பி செல்வதற்கு சற்று நேரத்திற்கு முன்பு, அவர் தம்முடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து இப்படியாகச் சொன்னார். "*பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச்*

*சாட்சிகளாயிருப்பீர்கள்* " (அப். 1:8) என்று. அதன் பின்பு, அப். 2:1–4 வசனங்களில், நாம் இப்படியாக வாசிக்கிறோம் "*பெந்தெகொஸ்தெ என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர் களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.*

அங்கே வந்திருந்த ஜனங்கள் அப்போஸ்தலர்கள் தங்கள் மொழிகளில் பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள். முதலில், இவர்கள் அப்போஸ்தலர்கள் மதுபானம் குடித்திருந்ததாக நினைத் தார்கள். ஆனால், பேதுரு யோவேல் தீர்க்கதரிசியைக் கொண்டு இது கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மீதும் ஆவியை ஊற்றுவேன் என்று உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் என்று சொன் னார். அநேக அற்புதங்களும், அடையாளங்களும் அப்போஸ்தலர் களாலே செய்யப்பட்டது என்று வேதவசனம் சொல்கிறது (அப். 2:43). ஆனால், பரிசுத்த ஆவியின் வல்லமையை கர்த்தர் யாரிடத்தில் வாக்குத்தத்தம் செய்தார் என்று நாம் கவனிக்க வேண்டும். நிச்சய மாகவே, அப்போஸ்தலர்களிடத்தில்தான். ஆகையால்தான், அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள் அல்லது அவர்கள் இப்படிப்பட்ட அற்புத அடையாளங்களைச் செய்யும்படி யாய் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். இதன் விளைவாகவும், இவர்களால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கேட்டதின் விளைவாகவும் மூவாயிரம் பேர் கர்த்தரில் விசுவாசம் வைத்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் இப்படிச் செய்ததினால் கர்த்தர் அவர்களை இரட்சித்து பரிசுத்த ஆவியைக் கொடுத்து, சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப். 2:38,40,47).

ஆனால், அங்கே அப்போஸ்தலர்களால் தாங்கள் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்ய முடியவில்லை. எனவே, கர்த்தர், தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் மீது அப்போஸ்தலர்கள் கைகளை வைக்கும்படி செய்தார். அதன்மூலம் அப்போஸ்தலர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் தேவனுடைய வார்த்தையை அறிவிக்கும்படி தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை மக்கள் நம்பும்படியாகப் பற்பல பாஷைகளில் பேசும் வல்லமையும், அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது (அப். 6:1–8).

அப்போஸ்தலர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர் களைத் தவிர மற்ற எல்லோரும் பரிசுத்த ஆவியின் குறிப்பிட்ட அளவைத் தான் பெற்றிருந்தார்கள். இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு

*அப்போஸ்தலர் 10, 11 அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.* கொர்நேலியுவும் அவன் வீட்டாரும், "*புறஜாதிகள் கர்த்தராலும், யூதர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்*" என்பதை நிரூபிக்கும் படியாக் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்.

கடைசியாக, அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்துப் போனார்கள். அதற்கு முன், பரிசுத்த ஆவியானவர் பல்வேறுபட்டவர்களை கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி வழிநடத்தினார். அப்பொழுதிருந்து இன்று வரை தேவனுடைய வார்த்தையைப் படிப்பதி னாலும், பிரசங்கிக்கக் கேட்பதினாலும் மனிதனுடைய இருதயத்தில் விசுவாசம் உண்டாகிறது. அதன் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு, அற்புத அடையாளங்கள் செய்ய முடியாத பரிசுத்த ஆவியின் அளவைப் பெறுகிறார்கள். தேவனுடைய வார்த்தை உறுதிப்படுத்தப்பட்டு விட்டதால் பற்பல பாஷைகளில் பேசுவது உட்பட, எவ்வித அற்புத அடையாளங்கள் இனித் தேவையில்லை. ஆதலால், இன்று மனிதனிடத்தில் பரிசுத்த ஆவியானவர் அற்புத அடையாளங்கள் செய்யும் விதத்தில் கிரியை செய்வதில்லை. ஒருவர் தேவனுடைய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற ஆவியின் வார்த்தையை விசுவாசியாவிட்டால், அவர்கள் ஓர் அற்புதத்தைக் கண்டாலும் அதனால் விசுவாசிக்கப் போவதில்லை.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் நமக்கு அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தராவிட்டால், நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்? பரிசுத்த ஆவி நமக்குள் வாசம் செய்வதன் நோக்கம் என்ன? வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி பரிசுத்த ஆவியின் சாட்சியை நாம் விசுவாசிக்கிறோம். *நாம் கர்த்தரை விசுவாசித்து அவருக்கு அதாவது, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும் போது, அவர் நம்மை இரட்சிக்கிறார், நமக்கு பரிசுத்த ஆவி தரப்படுகிறது* (அப். 2:38). அதன் பின்பு, *ஆவியானவர் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழிநடத்துகிறார்* (ரோமர் 8:1). *நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்* (ரோமர் 8:16) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. *ஆவியானவர் தாமே நமக்காக வேண்டுதல் செய்கிறார்* (ரோமர் 8:26) *ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்* (எபே. 1:14). மேலும், *தேவனுடைய வார்த்தை ஆவியின் பட்டயமாயிருக்கிறது* (எபே. 6:17).

அநேக கள்ள ஆவிகள் உண்டு. ஆனால், தேவனுடைய மெய் யான ஆவி பரிசுத்த ஆவிதான். நீங்கள் அப்படிப்பட்ட பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறீர்களா? அவர் உங்களுக்குள் வாசம் செய்கிறாரா? அந்த ஆவியை நீங்கள் பெற்றிராவிட்டால் நீங்கள் தேவனுடையவர்களல்ல.

நீங்கள் கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, பரிசுத்த ஆவியைத் தந்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். நீங்கள் இவைகளை ஏற்கனவே, செய்யவில்லை என்றால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ❁

பெண்கள் பகுதி

# நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்

Sis. RR NAYAGAM

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்று போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது (மத். 5:13). மேலும், மாற்கு 9:49,50, லூக்கா 14:34 ஆகிய பகுதிகளிலும் உப்பு பற்றிப் பேசப்படுகிறது.

அருமையான சகோதரிகளே, கர்த்தராகிய இயேசுவின் வாய் மொழிகளில் உதிர்ந்த உண்மைகளில் இது ஒரு மாபெரும் உண்மை. இந்த வசனங்களில் நம்முடைய பக்தி விருத்திக்கான பாடங்கள் சிலவற்றை பார்ப்போம்.

## I நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்

தேவனால் படைக்கப்பட்ட தண்ணீர், காற்று, உணவு போன்று உப்பும் மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். நாம் வசிக்கும் வீடு ஒருவேளை சாயம் பூசப்படாமல் இருக்கலாம். பள பளப்பில்லாத தரையாக, திரையில்லாத ஜன்னலாக இருக்கலாம். ஆனால், உப்பு இல்லாத வீடாக இருக்க முடியாது. உப்பு அவ்வளவு முக்கியம். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, 2 தீமோ. 4:11ல் " மாற்குவை உன்னோடே கூட்டிக் கொண்டு வா. ஊழியத்தில் அவன் எனக்கு பிரயோஜனமுள்ளவன் " என்று சொல்கிறான். ஒரு கிறிஸ்தவள் இழக்கப்படுவது ஈடு இணையற்ற, கணக்கிலடங்கா நஷ்டமாகும். " நான் ஒன்றுமில்லை " எனக்கு ஒருவருமில்லை " என்று ஒருபோதும் சொல்லக்கூடாது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் உப்பை போல முக்கியமானவன்.

உப்பு தன்னையே அழித்துக் கொண்டு தன் வேலையைச் செய்கிறது. இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த இயேசு கிறிஸ்து தன் ஜீவனையே கொடுத்துதான் அந்த வேலையைச் செய்தார். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்துக்கு நிருபம் எழுதும்போது " மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன் " (2 கொரி. 12:15) என்கிறார். கிறிஸ்தவத்திற்காக நாம் எதைத் தியாகம் செய்கிறோம்? மற்றவர்கள் இரட்சிக்கப்பட நம்முடைய நேரம், திறமை, பணம், அதைவிட நம்மை நாமே கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோமா?

மேலும், உப்பு ஒரு பொருளை பாதுகாக்க வேண்டுமானால் அப்பொருளோடு ஒன்றென கலக்க வேண்டும். அப்படிக் கலந்தாலும் தன் உப்புத் தன்மையை அது மாற்றிக் கொள்வதில்லை. அதுபோலத்

தான், நாம் உலகில் உள்ள மக்களோடு சேர்ந்து வாழ்ந்து அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தும் போது, நாம் உலகமாக மாறி விடக்கூடாது. நம்முடைய தனித்தன்மை அப்படியே மாறாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

## I உப்பு சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்?

மரமானது தன் பருவத்தில் கனிகொடாமல் போய் விடுகிறது (யோவான் 15:1,7) ஒரு ஆடு காணாமல் போய் விடுகிறது (லூக்கா 15:1,7). ஒரு குமாரன் பிரிந்து போய் விடுகிறான் (லூக்கா 15:11,32) அதுபோல் உப்பும் சில நேரங்களில் சாரமற்றுப் போய் விடுகிறது. கிறிஸ்தவனும் கிருபையினின்று விழுந்து இழந்து போய் விடுகிறான் (கலா. 5:4; 2 பேதுரு 2:20,22).

எப்படி ஒரு கிறிஸ்தவன் சாரமற்றுப் போகிறான்? முதலாவது, இந்த வசனப் பகுதியானது பாக்கிய வசனங்களைத் தொடர்ந்து வருகிறது. பாக்கியவான்கள் பற்றிப் பேசி முடித்த இயேசு கிறிஸ்து நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்கிறார். அப்படியானால் பாக்கியவான்களுடைய குணாதிசயங்களைப் பெற்றவர்கள் உண்மையாகவே பூமிக்கு உப்பாய் இருப்பார்கள். ஆவியில் எளிமை, பாவத்திற்கான துயரம், சாந்த குணம், நீதியின் மேல் பசி, தாகம், இரக்கம், இருதயத்தின் சுத்தம், சமாதானம் பண்ணுதல், நீதியினிமித்தம் துன்பப்படுதல் ஆகிய குணங்களைக் கடைபிடிக்காமல் போகும்போது நாம் சாரமற்றுப்போய் விடுகிறோம்.

இரண்டாவதாக, உப்பின் தன்மைகளாக நாம் முன்பு பார்த்தவைகளை நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் போனால் சாரமற்றுப் போய் விடுவோம்.

மூன்றாவதாக, நாம் தொடர்ந்து உலகத்தோடு ஒன்றாக சேர்ந்து சகல மீறுதல்களையும் செய்து கொண்டு உலகத்தோடு ஒன்றிப் போய் இருந்தோமானால் சாரமற்றுப்போய் விடுவோம். உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக். 4:4).

## II வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

அருமையானவர்களே உப்பு சாரமற்றுப் போகும் போது வரும் விளைவைப் பார்த்தீர்களா? பயங்கரமாயிருக்கிறது. சாரமில்லாத கிறிஸ்தவர்களும் இப்படித்தான் இருக்க நேரிடும். சபையிலும் மரியாதை கிடைக்காது. (2 தெச. 3:6; தீத்து. 3:10) மறுமையில் நித்திய அழிவையும் அனுபவிக்க வேண்டிவரும்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து சகலத்தையும் அறிந்தவர். அவர் வாயின் வார்த்தைகள் சகல அர்த்தத்தையும் உள்ளடக்கிய தாகத்தான் இருக்கும்.

நீங்கள் பூமிக்கு உப்பாயிருங்கள் என்று சொன்னதோடு சாரமில்லாத உப்பு மற்றும் அதனால் உண்டாகும் விளைவுகள் பற்றியும் பேசியிருப்பதைப் பார்க்கும்போது பயங்கரமாய் இருக்கிறது.

சாரமற்ற கிறிஸ்தவர்களாக நாம் இருந்தோமானால் ஒரு போதும் மற்றவர்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வர இயலாது. நம் வாழ்க்கையின் ஒரு பகுதியை மற்றவர்கள் பார்த்து இப்படிப் பட்டவர்கள் தான் கிறிஸ்தவர்கள் என்றால், நான் கிறிஸ்தவனாக இருக்கவே விரும்பவில்லை என்று கூறுமளவுக்குத் தரமும் தாக்கமு மில்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?.

அருமையானவர்களே நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று இப்பொழுது நமக்கே தெரிந்திருக்கும். உணவில் உப்பைப் போட்டபிறகு, அது வெளியே தெரியும்படியாக " நான் தான் உப்பு" என்று சொல்லுமளவுக்கு இருக்காது. உடனே மற்ற சேர்மானங் களுக்குள் நுழைந்து சென்று தன்னை ஒன்றுமில்லாமல் செய்து வெளியே தெரியாமல் ருசியை மாத்திரம் கொடுக்கும். கிறிஸ்தவர் களாகிய நாமும் அப்படித்தான் நம் பங்கை ஆற்ற வேண்டும். " மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நான் ஏவப்படும்படி ஒருவரை யொருவர் கவனித்து " (எபி. 10:24) என்று எபிரெய ஆசிரியர் கூறும் போது பிறருக்கு நாம் நன்மை செய்ய வேண்டும் என்பது தேவனால் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, சாரமுள்ள கிறிஸ்தவர்களாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்க வேண்டும்.

இதை வாசித்த அன்பு சகோதரிகளே! இயேசு கிறிஸ்து உப்பைப் பற்றி பேசின காரியங்களின் அர்த்தத்தை இப்பொழுது ஓரளவு புரிந்திருப்போம். இதை நாம் அற்பமாய் எடுத்துக் கொள்ள வேண்டாம். சாரமற்ற கிறிஸ்தவனின் முடிவு நித்திய அழிவாக இருப்பதால் நம்மை நாமே சோதித்து அழிவில்லாத ஜீவ கிரீடத்தை பெற்று நித்திய நித்திய காலமாய் இயேசுவோடு இருக்கப் பாடு படுவோம். பிரயாசையெடுப்போம். வேத வசனம் சொல்லுகிறபடி வாழ்வோம். ஆமென்.


## ஊழியர் தேவை

**புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் சிறப்பாகப் போதிக்கப்பட்டு, கால் நூற்றாண்டுக்கும் மேலாக தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்து வரும் " கிறிஸ்துவின் சபைக்கு" முழு நேரமாக இறைபணி செய்ய நற்சாட்சி பெற்ற, ஆத்தும பாரம் கொண்ட ஊழியர் தேவை.**

**குடும்பத் தேவைகள் தேவ தயவால் சந்திக்கப்படும்.**

**– ஆசிரியர்**

**தொடர்புக்கு : 98427 30382, 98422 49427**

வாலிபர் பகுதி

# தீர்மானம், கொள்கை, பரிசுத்தம்

**Bro. Benny Martin**

வருடத்தில் ஒரு முறை வரும் வசந்தகாலம் போல் வாழ்க்கையில் ஒருமுறை வரும் வாலிபப்பருவத்திலிருக்கும் வாலிபர்களுக்கு வானவராம் இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் மாதந்தோறும் மறக்காமல் சந்திப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. பிரியமானவர்களே! வேதப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் சில கதாப்பாத்திரங்களை பார்க்கும் போது நாம் அவர்களைப் பின்பற்றுவதற்கு தகுதியானவர்களாக இருப்ப தைக் காண முடியும். அப்படி ஒரு ஆச்சரியமான கதாப்பாத்திரம் தான் இந்த தானியேல். பொதுவாக இவ்வுலகில் ஒருவர் ஒரு துறையில் வெற்றி பெற வேண்டுமானால் அவர் சில காரியங்களை சமரசம் செய்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆனால், தானியேல் தன் வாலிபப் பிராயத்தில் கூட தேவனுடைய காரியங்களை உலகக் காரியங் களோடு சமரசம் செய்து கொள்ளாமலேயே வாழ்வில் புதிய உயரங்களைத் தொட்டார். இந்த தானியேல் அந்நிய தேசத்தில் அடிமையாக இருந்தபோதிலும் ராஜக்கட்டளையை விட தேவக் கட்டளையே மேலானது என்றெண்ணி அதற்கே கீழ்ப்படிந்தார். அன்று அவர் விளைவுகளைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால், இன்று வாலிபர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக, அரசின் சலுகைகளை பெறுவதற்காக உலகத்திற்கு ஒத்த வேஷம் போடுவதை நாம் பார்க்கிறோம். தானியேல் பாபிலோன் சாம்ராஜ்யத்தில் ஒரு அடிம்மயாக இருந்தபோதிலும் தேவனுக்கு விரோதமான செயலில் ஈடுபட கட்டளை வந்ததும், அது அவரை அணு அளவும் அசைக்க வில்லை. உயிருக்கு உலை வைக்கும் உத்தரவு ராஜாவிடமிருந்து பிறப்பிக்கப்பட்ட போதிலும் அதைத் துச்சமாக எண்ணி தேவனுக்காக நின்றார். தானியேல் பாபிலோன் தேசத்தில் உயர்ந்த பதவியை அடைவதற்கு அவரிடத்திலிருந்த எந்த குணாதிசயங்கள் காரணமாக அமைந்தன என்று இப்போது நாம் பார்ப்போம்.

**I அவர் தீர்மானமுடையவராக இருந்தார்**

தானியேல் வாலிபப்பருவத்தில் நேபுகாத்நேச்சரால் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டார். அந்த அந்நிய தேசத் திற்குப் போனவுடனையே தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடிய ராஜாவின் போஜனத்தைப் புசிக்கவும், அவருடைய திராட்ச ரசத்தைக் குடிக்கும் சவாலை எதிர்கொள்ள வேண்டியதாயிருந்தது. இந்த சரித்திரக் காட்சி நம் மனக்கண்ணில் தோன்றும்போது, " ராஜ போஜனத்தை ருசிபார்க்கும் வாய்ப்பை நழுவ விட்டுவிட்டாரே, இவர் பிழைக்கத் தெரியாதவர் " என்று சில வாலிபர்கள் நினைக்கக் கூடும். ஆனால், ராஜபோஜனம் தன்னை தீட்டுப்படுத்தும் என்று தானியேல் தன்

மனதில் தீர்மானித்திருந்தபடியால் அதைப் புசிக்கவில்லை. தானியேல், ராஜாவின் போஜனத்தைப் புசிக்க வேண்டும் என்கிற கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதினால் ஏற்படும் விளைவு களைப் பற்றி கவலைப்படாமல் ராஜாதி ராஜாவாகிய தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியும்படி தீர்மானித்தார். இன்று வாலிபர்கள், தேவனுக்கா? உலகத்திற்கா? என்று முடிவெடுக்கும் விஷயத்தில் முடிவெடுக்கத் தினறுவதை நாம் பார்க்க முடியும். இங்கே தானியேல் தேவனுக்கு முதலிடம் கொடுத்தபடியால், தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும், இரக்கமும் கிடைக்கும்படி செய்தார் (தானி. 1:9). நாம் உலகப் பிரகாரமான காரியங்களை துரித மாகத் தீர்மானிக்கிறோம்; ஆனால், தேவனுக்கடுத்த காரியங்கள் என்று வரும்போது தீர்மானிக்கத் தடுமாறுகிறோம். விளைவுகள் அப்படி இருக்குமோ? இப்படி இருக்குமோ? என்று முடிவெடுக்க முடியாமல் முடிவெடுக்கிறோம். ஆனால், ஒரு கிறிஸ்தவன் எப்படிப் பட்ட தீர்மானத்தை எடுக்க வேண்டும்? நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இதை மத். 6:33ல் தெளிவுப்படுத்தி விட்டார். நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும்போது, அதாவது பின்விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் தேவ சித்தத்தை நாம் நாடுகிறவர்களாக, அதை நிறைவேற்றுபவர் களாக இருக்கும்போது, நம் சத்துருக்களும் நம்மோடு சமாதான மாகும்படி செய்வார் (நீதி. 16:7). பிரியமானவர்களே! தேவன் நம்மை இவ்வுலகில் வாழ அனுமதிக்கும் கடைசி நிமிடம் வரை தேவனுக்காக வாழவும், தேவனுக்காக மரிக்கவும் தீர்மானிப்போம்.

## II அவர் கொள்கையுடைவராக இருந்தார்

இன்று பல அரசியல்வாதிகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் தங்களுக்கென்று சில கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அக்கொள்கைகளை பரப்புவதிலும் அவைகளுக்காக நிற்பதிலும் பிடிப்புள்ளவர்களாக இருப்பதை நாம் காண முடியும். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாமும் தேவனுடைய கொள்கைகளை அதாவது உபதேசங்களை பரப்புவதிலும், அவைகளுக்காக நிற்பதி லும் பிடிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். தானியேல் தன்னு டைய உறுதிப்பாட்டில் எந்த சமரசமும் செய்து கொள்ளவில்லை. ஒரு வாலிபனாக ராஜாவின் போஜனத்தை புசிக்க மறுப்பதிலும் சரி, முதிர் வயதில் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் வெகுமதிகளை வாங்க மறுப்பதிலும் சரி தன் கொள்கையில், தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார் (தானி. 1:8; 5:13,17). பொதுவாகவே, மக்கள் கொள்கையில் பிடிப்புள்ளவர்களை நம்பி தங்கள் பணிகளை ஒப்படைப்பார்கள். காரணம், அவர்கள் அப்பணியில் உறுதியாயிருந்து அதைச் செய்து முடிப்பதுதான். தேவனும் தங்கள் கொள்கையிலும், வார்த்தையிலும் உறுதியாயிருந்து, அவருக்காக நிற்கிறவர்களை மெச்சுகிறார் (சங். 15:15). பெரும்பாலான வாலிபர்கள் தேவ காரியங்களில் ஈடுபட ஆரம்பத்தில் ஆர்வமாக களமிறங்குகிறார்கள். ஆனால், உலகத்தின்

ஐசுவரியம், புகழ் போன்றவைகள் அவர்களுடைய கண்களை மறைத்து விடுகிறபடியால் தேவ காரியங்களில் ஆர்வம் குறைந்து, தேவனுக்காக நிற்க வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்த உறுதியும் குறைந்து விடுகிறது. ஒருவர் தன்னுடைய சொந்த நாட்டில் சுதந்திர மாக இருக்க முடியும். ஆனால், அந்நிய நாட்டிற்குப் போகும் போது அங்குள்ள சட்டத்திட்டங்களுக்கு கீழ்ப்படிந்தே ஆக வேண்டும். இல்லையென்றால் தண்டனைக்கு தப்ப முடியாது. இங்கே தானியேல் அந்நிய தேசமாகிய பாபிலோனில் இருந்து கொண்டு ராஜக்கட்டளைக்கு கீழ்ப்படியாமல் தேவக்கட்டளைக்குக் கீழ்ப் படிந்தது அவர் தன் கொள்கையில் எவ்வளவு பிடிப்புடையவராக இருந்திருக்கிறார் என்பதைத் தான் காட்டுகிறது.

### III அவர் பரிசுத்தமுடையவராக இருந்தார்

தானியேல் தீர்மானமுடையவராக, கொள்கையுடையவராக வாழ்க்கையில் இருந்தார் என்று நாம் பார்த்தோம். ஆனால், எல்லாவற்றையும் விட தானியேல் பரிசுத்தமாக இருந்தார். அதன் காரணமாகவே தேவன் அவரை அந்த அளவுக்கு உயர்த்தினார். தானியேலின் பரிசுத்த வாழ்க்கை பற்றி பார்க்கும்போது, அவருடைய சத்துருக்கள் கூட அவரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்க முடியவில்லை (தானி. 6:14). பொதுவாக, வாலிபர்கள் மத்தியில் ஒரு தவறான, அதே நேரத்தில் ஓர் அபாயகரமான எண்ணம் காணப்படுகிறது. அதென்ன வெனில், வாலிபப்பருவத்தில் பரிசுத்தம், பத்தியம் என்றெல்லாம் இருக்க வேண்டியதில்லை. அதை எல்லாம் ஆண்டு அனுபவித்துப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். பிரியமானவர்களே! வாலிப வயதில் நாம் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறோம் (1 தீமோ. 4:12). அதுமாத்திரமல்ல, தானியேல் தனிப்பட்ட வாழ்க்கையில் தினமும் மூன்று முறை ஜெபிக்கிறவராகவும் இருந்திருக்கிறார் (தானி. 6:10). அருமையானவர்களே! தேவன் தானியேலை உயர்த்தியதற்கு எவைகளெல்லாம் காரணங்களாக இருந்தன என்று மூன்று காரணங்களை நாம் இதுகாறும் பார்த்தோம். அவைகளை நம் வாழ்விலும் நடைமுறைப்படுத்தினால் தேவனிடமிருந்து அபரிதமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

### வாலிபனே! வாலிபனே! கொஞ்சம் கவனி

வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி. (பிர. 11:9)

சிறுவர் பகுதி

# சிறைப்பிடித்து வரப்பட்ட "சிறு பெண்"

Dr. ABEL R. NAYAGAM

எனதருமை சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் அனை வரும் சுகமாக வும், சந்தோஷமாகவும் இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்ன பிள்ளைகளே! கடந்த மாதத் தின் பாடத்தைப் படித்தீர்களா? ஏதாவது தீர்மானம் எடுத்துக் கொண்டீர்களா? எடுத்திருப்பீர் ளேயாகில் அதை நிறைவேற்று வதில் உறுதியாயிருங்கள்.

சரி, இந்த மாதம் நாம் நாகமான் என்ற படைத்தளபதி பற்றிப் பார்க்க இருக்கிறோம். 2 இராஜா : 5:1,15 வசனப் பகுதியை படித்தீர்களென்றால், அதில் நாகமான் என்ற மனிதனைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சரி, யார் இந்த நாகமான்? அவன் சீரிய ராஜாவின் படைக்கு தலை வனாக இருந்திருக்கிறான். தன் ராஜாவிற்கு மிகவும் நெருக்க மானவன். அது மட்டுமல்ல, அவன் பராக்கிரமசாலி என்று வசனம் சொல்கிறது. ஆனால், குழந்தைகளே, அவனுக்கு செல்வாக்கு, பணம், பதவி, பலம் என்று எல்லாம் இருந்தும், பெரிய ஒரு குறையும் இருந்தது. அது என்ன அந்தக் குறை? ஆம், அவன் குஷ்டரோகியாக இருந்தான்.

குஷ்டரோகம் என்பது ஒரு தோல் அழுகிக் காணப்படும் ஒரு கடும் நோயாகும். அந்நாட்களில் குஷ்டரோகம் உள்ளவர்களை ஊருக்கு வெளியே ஒதுக்கி வைத்து விடுவார்கள்.

சரி, நாகமானுக்கு இருந்த இந்த குஷ்டரோகம் என்ன ஆனது? தொடர்ந்து படியுங்கள்.

நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்ய இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைப்பிடித் துக் கொண்டு வரப்பட்ட ஒரு "சிறு பெண்" இருந்தாள். அவள் நாகமானின் மனைவியிடம் சமாரியாவில் இருக்கும் தீர்க்க தரிசியாகிய "எலிசா"வைப் பற்றிச் சொல்லி, அங்கே போனால் என் ஆண்டவனுக்கு சுகம் கிடைக்கும் என்றாள். அந்த சிறுபெண் சொன்னதைப் போலவே, சீரியா ராஜாவிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு நாகமான் அந்த தீர்க்கதரிசி யிடம் சென்றான்.

இங்கே நன்றாகக் கவனி யுங்கள்!! சிறைப்பிடித்துக் கொண்டு வரப்பட்ட " சிறு பெண்" ணாக அவள் இருந்தா லும், தான் அறிந்த தேவ மனித னைப் பற்றித் தெரிந்து வைத்து மிகவும் தைரியமாய், எவ்வித தயக்கமும் இல்லாமல்

நாகமானின் மனைவியிடம், " என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும், அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள் " (5:3).

இந்த சிறு பெண்ணின் வார்த்தைப்படி, நாகமான் எலிசாவிடம் சென்று, யோர்தான் நதியில் ஏழு தரம் ஸ்நானம் செய்து, தன் குஷ்ட ரோகம் நீங்கி சுகம் பெற்றான் என்று வாசித்து அறிகிறோம் (5:3,15).

குழந்தைகளே! இச்சம்பவத்திலிருந்து நீங்கள் இந்த மாதம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இதோ:

- அந்தச் சிறுபெண்ணைப் போல் தேவகாரியங்களில் அறிவு பெற்று, தைரியமாகச் செயல்படுகிறவர்களாய் நீங்கள் இருக்க வேண்டும்.
- அந்தச் சிறு பெண்ணுக்கு நாகமானின் வியாதி குறித்து அக்கறை இருந்ததுபோல, நமக்கும் பிறர்படும் கஷ்டங்களைப் பார்க்கும் போது, கவலையும், அக்கறையும், உதவி செய்யும் மனதும் இருக்க வேண்டும்.
- தேவனைப் பற்றி, உங்களுக்கு தேவன் மேல் இருக்கும் நம்பிக்கை பற்றி, தேவைப்படும் போது, பிறர் நலனுக்காக தைரியமாய் சொல்ல வேண்டும். சரியா?

பிள்ளைகளே! நீங்களும் இந்த சிறு பெண்ணை போல அநேகருடைய வாழ்வில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும் நம் தேவனின் வல்லமை பற்றியும், இயேசுவின் அன்பு பற்றியும் அநேகர் அறிந்திடச் செய்ய வேண்டும். அப்படி செய்தீர்களென்றால் நிச்சயம் தேவன் உங்களை எல்லா வகையிலும் ஆசீர்வதிப்பார்.

ஆமென்!!

## நாளும், நடப்பும்

1. தமிழகத்தில் பால் உற்பத்தி நிறுத்தப் போராட்டம் வாபஸ்
2. நாடு முழுவதும் ஊதிய உயர்வுக்கோரி வங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம்
3. கோதுமை மற்றும் பருத்தி உற்பத்தியில் இந்திய தன்னிறைவு - மத்திய வேளாண் துறை அமைச்சர்
4. ஆசிரியர் தகுதித் தேர்வில் 5 சதவீத மதிப்பெண் சலுகை
5. தமிழக பட்ஜெட் வரும் 13 ஆம் தேதி தாக்கல்
6. இந்தியா-நியூசிலாந்து இடையோன ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் தொடரைக் கைப்பற்றியது நியூசிலாந்து.

# இனி ஒருபோதும் யாருக்கும் உதவமாட்டேன்

**Bro. Jerry Bates**

**தமிழில் EZSR**

நீங்கள் யாரிடமாவது எப்போதாகிலும் ஏமாற்றமடைந்திருக் கிறீர்களா? நீங்கள் பலவாறாக ஏமாற்றப்பட்டிருக்கிறீர்கள் என்று எப்போதாகிலும் உணர்ந்திருக்கிறீர்களா? இக்கேள்விக்கு, ஒரு வேளை எல்லோரும் " ஆம் " என்று சொல்லாவிட்டால் கூட பெரும்பாலான வர்கள் ஆம் என்றே பதிலளிப்பார்கள் என நம்புகிறேன். இப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் நாம் இருதயத்தை இறுக்கமாக்கி, " இனி நான் ஏமாற்றமடையாதபடி யாருக்கும் உதவமாட்டேன் " என்று அறிவித்து விடுவோம். நமக்குக் கிடைத்த அனுபவத்தினடிப் படையில், இப்படிப்பட்டதொரு முடிவு எடுப்பது முற்றிலும் சரியானதே என்றும் உணருவோம்.

சரி, இந்த முடிவு புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தாலும், நாம் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிற ஒன்றாக இம்முடிவு இருக்க வேண்டிய அவசியமில்லை. மேலே உள்ள கேள்விகளுக்கு இயேசு ஆண்டவர் பதிலளித்திருக்க வேண்டியதாயிருந்திருக்குமானால், பல நேரங்களில் " ஆம் " என்றே அவரும் பதில் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவருடைய செயல் மிகவும் வேறுபட்டு இருந்தது. லூக்கா 17:11, 17 வசனங்களில்



இயேசுவிடம் 10 குஷ்டரோகிகள் வந்தார்கள். அவர்கள் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானது. அவர்கள் தூரத்திலே நின்று

" இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள் ". இயேசு இரங்கி, " நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் " என்றார். அப்படிக் கண்டிக்க போகையில் அவர்கள் சுத்தமானார்கள். இந்த மகத்தான ஆசீர்வாதம் பெற்ற 10 குஷ்ட ரோகிகளில் ஒருவன் திரும்பி வந்து அவருக்கு நன்றி சொன்னான். அப்படித் திரும்பி வந்து நன்றி சொன்னவன், யூதர்களால் மிகவும் தாழ்வாகப் பார்க்கப்பட்ட சமாரியன் என்று லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். வசனம் 17–ல், " *மற்ற ஒன்பது பேர் எங்கே?* " என்று இயேசுவின் கேள்வி அவருடைய உள்ளத்தில் இருந்த துக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இப்படியாக இயேசுவானவர் குஷ்டரோகிகளிடம் மட்டுமல்ல, பல நேரங்களில் யூத மதத் தலைவர்களிடமும் ஏமாற்றமடைந்திருக்கிறார். ஆயினும், அவர் ஒருபோதும் இரக்கம் பாராட்டுவதை விட்டுவிடவில்லை.

நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம்? தேவனை நம் வாழ்க்கையில் நாம் எப்போதாகிலும் தேவனை ஏமாற்ற மடையச் செய்திருக்கிறோமா? அவர் தந்த மகத்தான ஆசீர்வாதங்களுக்கு நன்றியில்லாமல் நடந்திருக்கிறோமா? இக்கேள்விகளுக்கு நாம் ஒவ்வொரு வரும் நிச்சயமாக ஆம் என்று தான் நாம் பதிலளிப்போம். ஆயினும், தேவன் நம் வாழ்வில் நமக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை. நம்முடைய பெலவீனங்களுக்கு மத்தியிலும் நம்மில் அவர் அன்பு கூருகிறார். நாம் தொடர்ந்து தவறு செய்கிறவர்களாக இருந்தாலும், நாம் மனந்திரும்பும்போது தொடர்ந்து மன்னித்து நன்மை செய்கிறவராக உள்ளார். தேவன் நமக்கு இப்படியாகச் செய்கிறபடியால், " நான் இனி யாருக்கும் உதவ மாட்டேன் " என்று செய்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். " ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் " (மத். 7:2). என்று இயேசு ஆண்டவர் விளம்பியிருக்கிறார். ❁

## எசேக்கியா ராஜாவை தேவனுக்கு உகந்தவனாக மாற்றிய குணங்கள்

**2 ராஜா 18 – 20 அதிகாரங்கள்**

1. கர்த்தரின் பார்வையில் சரியானதைச் செய்தான் (18:3)
2. உண்மையுள்ளவனும், சமரச மனப்பான்மை அற்றவனுமாயிருந்தான் (18:4)
3. கிரியை உள்ளவனாக இருந்தான் (2 நாளா 29:2,36)
4. இவன் நம்பிக்கை அவன் மீது இல்லாமல் தேவன் மீதிருந்தது (2 நாளா. 18:5)
5. கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டன் (18:6)

# " பட்டணம் " (அப். 8:8)

Bro. தானியேல் துரைராஜன்

" அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று" இந்தியாவின் முக்கிய பெரும் பட்டணங்கள், டெல்லி, மும்பை, சென்னை, கொல்கொத்தா. இவைகளை " பன்னாட்டு கலாச்சார, வாணிப பட்டணங்கள் " என்று அழைப்பார்கள்.

**நீதி. 11:10** " *நீதிமான்கள் நன்றாயிருந்தால் பட்டணம் களிகூரும்; துன்மார்கள் அழிந்தால் கெம்பீரம் உண்டாகும்* " என்று ஞானி சொல்லுகிறார்.

ஒவ்வொருவரும் தாங்கள் வசிக்கிற பட்டணம் தான் பெரிது என்று பேசுவார்கள். "நான் மதுரைக்காரன்", "நான் திருச்சிக்காரன்", "திருநெல்வேலிக்காரன்" ஜாக்கிரதை! என்று

அதைப் போலவே வேதாகமத்தில் ஒரு மனிதன் சொன்னான். " *என் சொந்தப் பட்டணத்தில் நான் சாக விரும்புகிறேன்* " என்று (2 சாமு. 19:31யும் 2 சாமு. 19:37–ஐ வாசித்துப் பாருங்கள். அவர் பெயர் "பார்சிலா". கீலேயாத்தியன், 80 வயதாயிருந்த மகாபெரிய மனுஷன். அவனை தாவீது ராஜா தம்முடன் வரும்படியும், தான் அவனை வைத்து பராமரிப்பதாகவும் சொன்னார். ஆனால், " பார்சிலா " என்ன சொன்னார் தெரியுமா? வசனம் 35ல் வாசித்துப் பாருங்கள். " *உமது அடியேனாகிய நான் இனி ராஜாவாகிய என் ஆண்டவனுக்கு பாரமாயிருக்க வேண்டியது என்ன?* " வசனம் 37–ல் " ..., நான் என் சொந்தப் பட்டணத்தில் மரிப்பதையே விரும்புகிறேன் " என்று சொன்னாரென்றால், அவர் தம் சொந்தப் பட்டணத்தை எவ்வளவாய் நேசித்தார் பாருங்கள்!.

ஒவ்வொரு பட்டணத்திற்கும், ஏதாவதொரு சிறப்பு இருக்கும். அதை வைத்தே, அந்தப் பட்டணத்தை அழைப்பார்கள். (உ.ம்) திருச்சியில் மலைக்கோட்டையிருக்கிறது திருச்சியை "*Rock City*" என்று அழைப்பார்கள்.

கோவையில் அதிகமாக " பஞ்சாலைகள் " இருக்கிறது. ஆகவே, கோவையை "Cotton City" என்று அழைப்பார்கள். மதுரையில் கோவில்கள் (Temples) நிறைந்து காணப்படுவதால், " Temple City " என்று அதை என்று அழைப்பார்கள்.

இதைப்போலவே, பைபிளில் எருசலேமை மையமாக வைத்து, சத்தியமிருந்தால் இந்த எருசலேமை " சத்திய நகரம் " (City of Truth) என்று அழைத்தார்கள். (சகரியா 8:3), " *நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம் பண்ணுவேன், எருசலேம் சத்திய நகரம் என்றும் ..... கர்த்தர் சொல்லுகிறார்.* ஏனென்றால், எருசலேமிலிருந்து வேதம் வெளிப்படும் என்பது தீர்க்கதரிசனம் (ஏசாயா 2:3,4)

*எருசலேமிலிருந்து பாவமன்னிப்பு துவங்கும்* " என்று அருள் நாதர் இயேசுவும் சொல்லியிருக்கிறார். வாசித்துப் பாருங்கள் (லூக். 24:46, 47,48). இவைகள் யாவும் அப். 2ம் அதிகாரத்தில் நிறைவேறியது.

இப்படிப்பட்ட பட்டணங்களில், இயேசு பலத்த செய்கைகளில் அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள், மனந் திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் (இயேசு) கடிந்து கொள்ளத் தொடங்கினார் (மத். 11:20,21,22,23,24) வரை வாசித்துப் பாருங்கள் கொராசினே! பெத்சாயிதாவே!! உனக்கு ஐயோ. உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும், சீதோனினும் செய்யப் பட்டிருந்ததானால் அப்பொழுதே இரட்டுடுத்தி சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே! நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய் என்று (இயேசு, பெரும்பாலும் இப்பட்டணங்களில் போதிக்கிறார். அற்புதங்கள் செய்திருக்கிறார்).

சகோதரனே! சகோதரியே!! இவைகளெல்லாம் அஸ்தி பாரங்கள் இல்லாத பட்டணங்கள். ஆனால், " நாமோ அஸ்திபாரங் களுள்ள பட்டணத்திற்காகக் காத்திருப்பவர்கள் (எபி. 11:10ல் வாசிக்கி றோம் ". ஏனெனில், ஆபிரகாம் விசுவாசத்தினாலே தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள பட்டணத்துக்கு அவன் காத்திருந்தான் " என்று.

எல்லா பட்டணங்களுக்கும் அஸ்திபாரங்களில்லை. அவை களெல்லாம் ஆட்டம் கண்டுவிடும். அசைக்கப்படும், சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். கொஞ்ச காலத்துக்குள்ளே இன்னும் ஒரு தரம் நான் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், வெட்டாந் தரையையும் அசையப்பண்ணுவேன் (ஆகாய 2:6).

அன்பு நண்பர்களே! அருமைத் தாய்மார்களே! ஜீவனுள்ள தேவனுடைய நரகத்திற்கு வாருங்கள். அதுவே சபை சபையானது சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமானது வாசித்துப்பாருங்கள் (எபி. 12:22,24). *" நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனு டைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும் ஆயிரம் பதினாயிர மான தேவ தூதர்களினிடத்திற்கும் ...... வந்து சேருங்கள் "!*

**எபி. 13:14** " நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப் போகிறதையே நாடித் தேடுகிறேம் "!

**நிறைவாக:** " பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தன பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய " பரிசுத்த நகரத்தை " த் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அத தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டி ருந்தது. (வெளி. 21:1,2).

சபை – மணவாட்டி. ஆகவே, சபையானது அலங்கரிக்கப் பட்டவளாய் " பரிசுத்தம் ", " நீதி ", என்ற அலங்காரத்துடன் மணவாளன் கிறிஸ்துவுக்காக ஆயத்தமாயிருக்க வேண்டும்.

This is much the same way. Apostle Paul Presents the church to Christ for us! *(எபேசி. 5:25,27)*

# பாடம்-39. விதைக்கிறவன் உவமை

Bro. K. பாஸ்கர்

அன்பான வாசகர்களே, உங்கள் அனைவருக்கும் ஆண்டவரும், மெய்ப் போதகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அடையாளம் தெரிந்து கொள்ள விதைக்கிறவன் உவமையை நமக்கு இயேசு கிறிஸ்து போதித்திருக்கிறார். அதை இம்மாதப் பாடத்தில் படித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்வோமாக!

## I உவமை என்றால் என்ன?

உவமை என்றால் உதாரணம், எடுத்துக்காட்டு, இணைத்துப் பேசுதல் மற்றும் ஒப்புமை என்று பல விளக்கங்கள் உள்ளன. உவமை என்பது ஆவிக்குரிய அர்த்தமுள்ள பூமிக்குரிய சம்பவம் எனலாம். உவமை என்பதற்கு எபிரெய வார்த்தையானது "மாஷால்" எனப்படும். இதன் பொருள் ஒரு ஆழமான உண்மையை எடுத்துக் காட்டுடன் சொல்லப்படுவதாகும். உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் தாவீது என்ற அரசன் தனது படைவீரன் உரியா என்பவனின் மனைவியை அடைய அவனை போர்க்களத்தில் தந்திரமாக கொன்று போட்டு உரியாவின் மனைவியை எடுத்துக் கொண்டது தேவனுடைய பார்வையிலே பாவமாயிற்று. இதை உணர்ந்த தேவன் நாத்தான் தீர்க்கதரிசியை தாவீதுவினிடத்தில் அனுப்பினார். தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து அவனை நோக்கி ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள். ஒருவன் ஐசுவரியவான் மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது தரித்திரனுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே ஒரு சின்ன ஆட்டுக் குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது. அது அவனோடும் அவன் பிள்ளைகளோடும்கூட இருந்து வளர்ந்தது. அது அவன் வாயின் அப்பத்தைத் தின்று அவன் பாத்திரத்தில் குடித்து அவன் மடியிலே படுத்துக் கொண்டு அவனுக்கு ஒரு மகளைப் போல இருந்தது.

அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான். அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவிக்க தன்னுடைய ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல் அந்தத் தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷருக்கு சமையல் பண்ணுவித்தான் எனறான். நாத்தான் தீர்க்கதரிசி சொன்ன இந்த உவமை தாவீதின் பாவத்தின் உண்மையை உணர்த்திற்று. முதலில் உணரவில்லை ஆதலால் தாவீது இந்த உவமையைக் கேட்டவுடன் கோபங்கொண்டு அந்த ஐசுவரியவான் மரணத்திற்குப் பாத்திரன் என்று சொன்னான்.

அங்கே தீர்க்கதரிசி நீயே அந்த மனுஷன் என்று சொல்லி உரியாவின் மனைவியை எடுத்துக் கொண்டது பாவம் என்று உணர்த்தினார். (2 சாமு. 12:1,10) இந்த் உவமையில் தாவீது பாவம் செய்தது உண்மை யான நிகழ்ச்சி. அதை உணர்த்த தீர்க்கதரிசி ஒரு எடுத்துக் காட்டு சொன்னார். ஒரு ஆழமான உண்மையை எடுத்துக்காட்டுடன் சொல்வதுதான் உவமை.

## II கிறிஸ்துவின் உவமை எதை உணர்த்துகின்றது?

இயேசு கிறிஸ்துவின் போதனையின் மகுடமாக இருப்பது உவமைகள். உவமைகளின் மூலமாக அவர் போதித்தபடியினாலே அவர் தலையாய போதகர் என்று சரித்திர வல்லுனர்கள் வர்ணித்துள்ளனர். உவமை என்பதற்கான கிரேக்க வார்த்தையானது " பாரபொலே " என்பதாகும்.

கிறிஸ்துவின் உவமையானது அவரது இராஜ்யத்தைக் குறித்து நம் உள்ளங்களில் பதிப்பது உவமையின் குறிக்கோளாக இருக்கின்றது. ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றிய உண்மைகளைப் படமாக வரைவதே உவமையின் நோக்கமாக இருக்கின்றது. ஆனால், இன்று அநேகர் இயேசுவின் உவமைகளைப் போதிக்கின்றனர், பேசுகின்றனர். ஆனால், அதன் பொருளாக இருக்கின்ற இராஜ்யத் தைப் போதிப்பதில்லை, பேசுவதுமில்லை. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து உவமையின் கருத்தைச் சொல்லியிருக்கின்றார். விதைக் கிறவன் உவமையின் கருத்தை தமது சீஷர்களுக்குச் சொல்லும் போது விதை என்பது இராஜ்யத்தின் வசனம் என்று கூறுகின்றார் (மத். 13: 18,19) ஆகவே, கிறிஸ்துவின் உவமை இராஜ்யத்தை உணர்த்துவதாக உள்ளது (மத். 13:31,34; மாற்கு 4:10,11; லூக். 9,10)

இராஜ்யம் என்பது இயேசுவின் போதனையின் நோக்கமா யிருக்கிறது. இதன் கிரேக்க வார்த்தையானது " பாசிலையா " என்பதாகும். இதன் அர்த்தம் கிறிஸ்துவின் ஆட்சியானது ஒரு நாட்டைக் குறிக்காமல் உலக முழுவதும் இருக்கின்ற தேவனுடைய பிள்ளை களை ஆளுவதைக் குறிக்கின்றது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய அரசாட்சியைக் குறிக்கின்றது. இப்படிப்பட்ட ஆழமான உண்மை யைச் சொல்ல கிறிஸ்து உவமை வழியாகப் போதித்து புரிய வைக் கின்றார். நாம் உவமைகளைப் படிக்கும்போது ராஜ்யமாகிய சபை யைப் பற்றி உணர வேண்டும். இயேசு கிறிஸ்து இராஜ்யமும் சபையும் ஒன்று என்பதைக் கூறுவதைக் கவனியுங்கள். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேருதுவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற் கொள்வதில்லை. பரலோக இராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன் பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்ட விழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டி ருக்கும் என்றார் (மத். 16:18,19). இதன்படி முதல் நூற்றாண்டில்

அதாவது கி.பி. 33ல் பேதுரு சுவிசேஷ வசனத்தின் திறவுகோலால் 3,000 பேருடன் பரலோக ராஜ்யமாகிய சபைக்குள் பிரவேசித்தார். அதுமுதல் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சேர்த்துக் கொண்டு வந்தார். (அப். 2:37,43). கீழ்ப்படியாதவர்கள் சபையிலிருந்து விலக்கப்படுகிறார்கள். சபையிலிருந்து விலக்கப் பட்டவர்கள் பூலோகத்திலே கட்டவிழ்க்கப்படுவது போல பரலோகத் திலும் கட்டவிழ்க்கப்படுகிறார்கள். (1 தீமோ. 1:19–20,2 தீமோ. 4:14,15; வெளி. 22:18,19). எனவே, ராஜ்யமாகிய சபை இப்பொழுது கட்டப் பட்டு வருகின்றது (எபே. 2:19–22) இந்த இராஜ்யத்திற்குள் அதாவது கிறிஸ்துவின் சபைக்குள் இருப்போமாக! இதைத்தான் கிறிஸ்துவின் உவமையானது உணர்த்துகின்றது.

## III விதைக்கிறவன் உவமையில் இராஜ்யமாகிய சபை

விதைக்கிறவன் உவமையில் இயேசு கிறிஸ்து கேட்டலின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றார். கேளுங்கள் விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான் என்று ஆரம்பிக்கின்றார். ஏனென்றால், கேட்டலின் மூலமாகத்தான் விசுவாசம் வரும் (ரோமர் 10:17) அவர், கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று முடிக்கின்றார். (மத். 13:3,9). அதாவது, கவனமாகக் கேளுங்கள் என்கிறார். நாம் கவனமாக இல்லாததினால் வசன ரீதியாக செயல் படாத சபைகளில் நாம் இருக்கின்றோம்! ஆகவே, நாம் கவனமாக கேட்க வேண்டும்.

விதைக்கிறவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்தது பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது. சில விதை அதிக அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெளியில் ஏறினபோதோ, வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது. முள் வளர்ந்து அதை நெருக்கிப் போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது (மத். 13:4,8).

இந்த உவமையில் இயேசு கூறும் விளக்கம். விதை என்பது இராஜ்யத்தின் வசனம் நிலம் என்பது மக்களின் இருதயம். விதைக் கிறவன் பிரசங்கிக்கிறவர் (மத். 13:19) இராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டு உண்மையும் நன்மையுமான நல்ல இருதயமுள்ளவர்கள் கீழ்ப்படிந்து பலன் கொடுக்கின்றனர். அவர்களே நல்ல நிலம் (லூக். 8:15) இராஜ்யத் திற்கான வசனத்தை விதைக்கும்பொழுது இராஜ்யம் உண்டாகு கின்றது. முதல் நூற்றாண்டில் இராஜ்யம் உண்டானது (1 கொரி. 4:20) இந்த இராஜ்யம் பரலோக இராஜ்யம் என்று மத்தேயு எழுதினார். இதையே லூக்கா எழுதின போது தேவனுடைய ராஜ்யம் என்றார். இதையே அப்போஸ்தலன் பவுல் கிறிஸ்துவின் ராஜ்யம் என்றும், கிறிஸ்துவின் சபை என்றும் நமக்கு அடையாளப்படுத்துகிறார் (எபே. 5:5; ரோமர் 16:16).

(தொடரும்)

# எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ சாமுவேலை எழும்பி வரச் செய்தாளா?

***Bro. Max Patterson***

**1 சா**முவேல் 28 ஆம் அதிகாரத்தில் சவுல் மற்றும் எந்தோரிலைச் சேர்ந்த அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே சவுல் நம்பிக்கையற்ற நிலைமையில் இருந்தான். இதற்கு முன்பு சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களை மிகவும் அவ மரியாதையுடன் நடத்தி அவர்களை வெறுத்தான். அஞ்சனம் பார்க்கிறவர்களை, குறிசொல்லுகிறவர்களையும் சவுல் நிர்மூலமாக்கினான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், இப்போது நம்பிக்கையற்ற நிலையில் இருக்கும் போது, அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ மூலமாக சாமுவேலின் ஆலோசனையை நாட விரும்பினான். ஆனால், சாமுவேல் உயிரோடிருந்த போது அவருடைய ஞானத்தை சவுல் அவமதித்தான்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, ஆவிகளோடு பேசுகிறவர்கள் வழக்கமாகச் செய்வது போல் செய்தாள். அங்கே நடந்த காரியம் ஆச்சரியமானது. சாமுவேல் அங்கே தோன்றினார். சாமுவேல் எழும்பி வந்தது உண்மை தான். ஆயினும், அது அந்த ஸ்திரீயின் மந்திரத்தால் நிறைவேற்றப்படவில்லை. ஏனெனில், அவள் அங்கே நடந்த சம்பவத்திற்கு ஆயத்தமாகாமல் தான் இருந்தாள். உண்மையில், அவள் சாமுவேல் எழும்பி விடுவாரார் என்று எதிர்பார்க்கவில்லை. அவர் எழும்பி வந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தக் காரியத்தில் அந்த ஸ்திரீயை விட சவுலுக்கு அவன் மேல் நம்பிக்கை அதிகமாக இருந்தது.

சாமுவேல் எழுந்து வந்தது அந்த ஸ்திரீயின் வல்லமையினாலோ அல்லது பிசாசின் முகமையினாலோ அல்ல. அது மாய மந்திரமுமல்ல. அங்கே சவுலையும், அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயையும் கடிந்து கொள்ளும்படி காரியங்கள் நடந்தது. நடந்தது தெளிவாகவே ஓர் அற்புதம்தான். சாமுவேல் சவுலுக்குக் கொடுத்த செய்தியில் அற்புதத்தின் உண்மைத் தன்மை நிரூபணமாகிறது. வசனம் 19-ல் கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக் கொடுப்பார்; நாளைக்கு நீயும், உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்,

சாமுவேல், பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலுக்கெதிரான யுத்தத்தில் வெற்றி பெறுவார்கள், சவுலும், அவருடைய குமாரர் களும் இ... செத்துப் போவார்கள். இந்த விபரங்கள் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கோ, சாத்தானுக்கோ அவனுடைய ஏவலாளுக்கோ தெரியாது.

எனவே, அது தேவ ஆவியினால் ஏவப்பட்டுத்தான் வெளிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆகவே, சாமுவேல் சவுல் ராஜாவுக்கு முன்பாக தோன்றியது அஞ்சனத்தினாலல்ல. மாறாக, தெய்வீக இடைபாட்டினால்தான் தோன்றினார். அங்கே நடந்த காரியத்தின் நோக்கம் அந்த ஸ்திரீயை யும், சவுலையும் கடிந்து கொள்வதற்காகத்தான். இந்த சம்பவம் மாய வித்தையில் நம்பிக்கை வைக்க எவ்விதத்திலும் இடங்கொடுக்க வில்லை. நடந்த சம்பவத்தில் எந்த மாயமந்திரமும் இல்லை, அது போல, அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ தன்னுடைய வல்லமை யினால் சாமுவேலை எழும்பி வரச் செய்யவும் இல்லை.

## சோர்வைக் களையும் வழிகள்

1. பெலனுக்காக தேவனுடைய வார்த்தையினிடத்தில் திரும்புவோம் (எரே. 20:9; மத். 4:4)
2. வாழ்க்கையில் எப்போதும் தேவனுக்கு முதலிடம் கொடுப்போம் (மத். 6:33)
3. சாத்தான் நம்முடைய சோர்வில் மகிழ்ச்சி அடைகிறான் என்பதை நினைவில் கொள்வோம் (1 பேதுரு 5:8)
4. சோதனைகள் மூலமாகத்தான் நம் வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுகிறதென்பதை புரிந்து கொள்வோம் (யாக். 1:2,4).
5. சோர்வைக் களைய தேவ ஞானத்திற்காக ஜெபிப்போம் (யாக். 1:5).

# விசுவாசமா அல்லது உணர்வா?

***Bro. Frank Chesser***



நீங்கள் விசுவாசத்தால் நடக்கிறீர்களா அல்லது உணர்வுகளால் நடத்தப்படுகிறீர்களா? நீங்கள் இக்கேள்விக்கு எப்படி பதிலளிக்கப் போகிறீர்கள் என்பது உங்கள் நித்திய வாழ்வை நிர்ணயிக்கும். நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? அநேக மக்கள் நான் என் இருதயத்தில் உணர்கிறேன் என்று இந்த கேள்விக்கு பதிலளிக்கிறார்கள். இரட்சிப்பு போன்ற மிக முக்கியமான ஒன்றை ஒருவர் வெறும் உணர்வின் அடிப்படையில் அனுமதிப்பது மிகவும் துக்க மானது. வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும், ஒரு குறிப்பிட்ட காரியம் சரியானதா அல்லது தவறானதா என்பதைத் தீர்மானிக்க அடிப்படை அளவுகோலாக உணர்வை எந்த ஒரு நபரும் அனுமதிப்பதில்லை.

உதாரணமாக, ஒருவர் "*உணர்வுகளைக் கொண்டு*" கேக் செய்வதில்லை. மாறாக, கேக் செய்வதற்கு என்னென்ன பொருள்கள் பயன் படுத்தப்பட வேண்டும், பொருள்களின் சரியான அளவு, ரொட்டி சுடுவதற்கு தேவையான சூடு போன்றவைகளை அறிய செய்முறை ஆலோசிக்கப்படுகிறது. ஒரு கட்டிட மேஸ்திரி, "உணர்வுகளைக் கொண்டு" ஒரு கட்டிடத்தைக் கட்ட முயற்சி செய்யமாட்டார். மாறாக, அந்த வீடு சரியாக எப்படி கட்டி முடிக்கப்பட வேண்டும் என்பதை அறிவதற்காக அதன் மாதிரியைக் கேட்பார். அதுபோல ஒருவர் ஓரிடத்திற்கு பிரயாணம் செய்ய வேண்டுமென்றால் வயல் வெளி வழியாகச் சுற்றித் திரிய விரும்பமாட்டார். மாறாக, எப்போது வலது பக்கம் திரும்ப வேண்டும், எப்போது இடது பக்கம் திரும்ப வேண்டும் என்பதை அறிவதற்காக சாலை வரை படத்தை நாடுவார்.

மேலும், ஒருவர் கேக் செய்யும் போது அந்த செய்முறை தவறாக அல்லது தோல்வியாக முடிந்து விட்டால், பயன்படுத்திய பொருட்க ளால் சுவை தவறாகி விட்டது என்று சொல்லி கூடுதலாக பதினைந்து பொருள்களை சேர்க்க வேண்டுமென்று ஒருவர் வாதாட மாட்டார். அதுபோல, அந்தக் கட்டிட மாதிரி இரண்டு படுக்கை அறைகளைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று தெரிவிக்கும் போது, புத்தியுள்ள மேஸ்திரி மூன்றாவது படுக்கை அறையை துணிந்து கட்டி விட்டுப் பின்பு தன் முயற்சியை நியாயப்படுத்த முற்படமாட்டார். அதுபோல, பயணிக்க விரும்புகிற ஒருவர், அதாவது, ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் பயணம் செய்ய விரும்புகிற ஒருவர், சாலை வரைபடம் தவறானது என்று சொல்லி குறுக்கும் நெடுக்குமாகப் பயணம் செய்ய மாட்டார்.

இதே விதியை மதசம்மந்தமான காரியங்களுக்குப் பொருத்திப் பார்க்க அநேக மக்கள் விரும்புவதில்லை. அது அவர்களால் முடிவதில்லை. *நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும்* என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (II கொரி. 5:7). நம் விசுவாசத்தின் ஒரே ஆதாரம் தேவனுடைய வார்த்தைகள் தான் (ரோமர் 10:17). எனவே, விசுவாசித்து நடப்பதென்பது தேவனுடைய வார்த்தைகளின்படி நடப்பதாகும். ஒரு செயல் தேவனுடைய வார்த்தையால் அங்கீகரிக்கப்படவில்லையென்றால் அச்செயலில் ஈடுபடக்கூடாது. தேவனுடைய வார்த்தை தான் தெய்வீக செய்முறை மாதிரி அல்லது வரைபடமாயிருக்கிறது.

ஒருவர் தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று உணர்வதால் மாத்திரம் அவர் இரட்சிக்கப்பட்டு விட்டார் என்று அவரால் அறிந்து கொள்ள முடியாது. ஒருவர் தன்னுடைய ஆராதனையை தேவன் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என தான் உணர்வதால் மாத்திரம் அந்த ஆராதனையை தேவன் ஏற்றுக் கொண்டு விட்டார் என்று சொல்ல முடியாது. அது போல, ஒருவர் பரலோகத்திற்கான பாதையில் சென்று கொண்டிருக்கிறார் என்று அவருடைய "உணர்வை" அடிப்படையாக வைத்து அறிந்து கொள்வது முடியாத காரியம். தேவனுடைய வார்த்தை நம் வரைபடமாக, மாதிரியாக இருக்கிறபடியால் நாம் அதன் ஆலோசனைப்படி செயல்பட வேண்டும். மோசே அந்த கூடாரத்தைக் கட்ட தெய்வீக மாதிரியின் படி செய்ய எச்சரிக்கையாயிருந்தது போல, நம் ஆவிக்குரிய ஜீவியங்கள் கட்டப்பட தெய்வீக மாதிரியைப் பின்பற்ற நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

சாட்சியங்களை நம்புவது மற்றும் ஏற்றுக்கொள்வதின் விளைவாகவே உணர்வுகள் ஏற்படுகிறது. உதாரணமாக, ஒரு மனிதனுக்கு தன்னுடைய பிரியமான ஒருவர் வாகன விபத்தில் இறந்து விட்டதாகச் செய்தி அனுப்பப்படுகிறது. உடனடியாக அவர் துக்கத்தால் நிறைந்து விடுகிறார். சிறிது நேரத்திறகுப் பிறகு தவறான செய்தி அவருக்கு அனுப்பட்டுவிட்டதாக செய்தி போய், அவருக்குப் பிரியமானவர் உயிரோடு இருப்பதாக, நன்றாக இருப்பதாக மீண்டும் வருகிறது. உடனடியாக அவருடைய உணர்வுகள் மாற்றத்திற்குட்பட்டு சந்தோஷத்தால் நிறைந்து காணப்படுவார். உணர்வுகள் ஒருவர் பெற்றுக் கொள்கிற தகவல் அல்லது சாட்சியத்தின் தன்மைக்கேற்ப மாறக் கூடியவைகளாக இருக்கின்றன. ஒருவருக்கு துக்க செய்தி வந்து அவர் அதை நம்பினால் அந்தச் செய்தி சரியா, தவறா என்பதைப் பற்றிப் பொருட்படுத்தாமல் அவர் துக்கமாகக் காணப்படுவார். இதனால் தான் அனுதின வாழ்விலும், மத சம்மந்தமான காரியங்களிலும் உணர்வுகள் நம்பத் தகுந்தவைகளாக இல்லை.

அநேக மக்கள் மதசம்மந்தமான காரியங்களில் தவறாக இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்கள் உணர்வுகளை

தங்கள் வழி காட்டியாக இருக்க அனுமதித்திருக்கிறார்கள், அவர்களின் உணர்வுகள் தேவனுடைய வார்த்தையோடு இசைவாக இல்லாத உபதேசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒருவர் தான் தவறில் இருந்து கொண்டு, சத்தியத்தில் பாதுகாப்பாக இருப்பதாக உணர முடியும். பவுல் கிறிஸ்தவராவதற்கு முன்பு பக்தியுள்ள பரிசேயனாக இருந்தார். அவர் தம்மைப் பற்றி இவ்விதமாக விவரிக்கிறார். .... *முன்னோர்களுடைய வேதப் பிரமாணத்தின்படி திட்டமாய் போதிக்கப்பட்டு, இன்றையத் தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாய் இருப்பது போல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன் என்று* (அப். 22:3). பவுல் எல்லா விஷயங்களிலும் நல் மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்ததாகக் கூறுகிறார் (அப். 23:1). பவுல் தான் ஆவிக்குரிய பிரகாரமாக பாதுகாப்பாக இருப்பதாகவும், தான் சரியாக இருப்பதாகவும் உணர்ந்தார், ஆனால், அவர் தவறில் இருந்தார். உணர்வுகளினால் தொடர்ந்து நடக்க, பவுல் தீர்மானித்திருந்தால் அவர் ஒரு போதும் யூத மார்க்கத்தைத் துறந்து கிறிஸ்தவத்தைத் தழுவியிருக்கமாட்டார்.

"விசுவாசித்து நடப்பது" என்பதின் பொருள், ஒருவன் தேவனை விசுவாசிப்பது, கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை விசுவாசிப்பது என்பதை விட அதிகமான காரியங்களை உள்ளடக்கியது. *பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன* (யாக். 2:19). இயேசு தன் மீது விசுவாசம் வைத்த குறிப்பிட்ட யூதர்களிடம் பேசினார் (யோவா 6:30). ஆயினும், பின்பு இதே யூதர்களை அவர் பிசாசின் பிள்ளைகள் என்று சொல்கிறார் (யோவா 8:44), ஏனென்றால், அவர்கள் தங்கள் விசுவாசத்தை தேவனுடைய வார்த்தைகளுக்கேற்ப கிரியையாக மாற்ற வில்லை. யூதர்களின் பிரதான அதிகாரிகள் அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் "*... அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம் பாக்கப்படாதபடி பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணா திருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள் (யோவா. 12:42,43).* அகிரிப்பா ராஜா கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசிகள் சொன்ன காரியங்களை விசுவாசித்தான். ஆயினும், அவன் கிறிஸ்தவனாக மாறத் தவறி விட்டான் (அப். 26:27,28). *ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே* (யாக். 2:24). கீழ்ப்படிகிற விசுவாசமே இரட்சிக்கிற விசுவாசமாயிருக்கிறது. *அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்* (கலாத். 5:6). ஒருவர் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானால் *கீழ்ப்படிகிற விசுவாசம்* பெற்றிருக்க வேண்டும் (ரோம. 16:26). பரலோக ராஜ்யத்தில் யார் பிரவேசிப்பார்? இயேசு இவ்விதமாகப் பதில் சொன்னார் "*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே*

*பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்* " என்று (மத். 7:21). இரட்சிப்பு ஒரு குறிப்பிட்ட சாராருக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட சாரார் *அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களே* (எபி. 5:9).

கீழ்ப்படிகிற விசுவாசத்தில் தேவனுடைய சித்தத்திற்கு மனிதன் பதிலளிக்கும்போது அதன் விளைவாக தெய்வீகக்கிருபையாலும், கிறிஸ்துவின் இரத்தத்தாலும் மனிதன் இரட்சிக்கப்படுகிறான். தேவனுடைய சித்தத்தைக் கேட்டு, விசுவாசித்து அதற்குக் கீழ்ப் படியும் போது, மனிதன் தேவ கிருபையினாலே இரட்சிப்பை அனுபவிக்கிறான். இவ்விதமாக அவன் மிகப்பெரிய உணர்வுக் குள்ளாக கடந்து வருகிறான். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய இரட்சிப்புக்கு உணர்வுகளை " நிரூபணமாகவோ " அல்லது " ஒரு சாட்சியாகவோ " கேட்டுக்கொள்வதில்லை. அவன் வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற தெய்வீக சத்தியத்திற்கும், அந்த சத்தியத்திற்கு இசைவாயிருப்பதையுமே கேட்டுக் கொள்கிறான். ஏனெனில், "*சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்* " (யோவா 8:32). ஆயினும், ஒருவர் கீழ்ப்படிகிற விசுவாசத்தில் தேவனுடைய சித்தத்திற்கு பதிலளிக்கும்போது தேவனுடைய கிருபையால் இரட்சிப்பை அனுபவிக்கிறார், அது அவருக்கு நிச்சயமாக நல்ல உணர்வை ஏற்படுத்துவதற்கு போதுமான காரணமாயிருக்கிறது.

நீங்கள் " விசுவாசத்தினால் " நடக்கிறீர்களா அல்லது " உணர்வு களால் " நடக்கிறீர்களா? போதிக்கப்படாத இருதயம் "...திருக்குள்ள தும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது " (எரே. 17:9). " தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன் (நீதி. 28:26) என்று ஞானி சாலமோன் கூறியுள் ளார். எனவே, உங்கள் நம்பிக்கையை தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையினிடத்திலும் வையுங்கள். மாறும் தன்மை கொண்ட மனித உணர்வுகளின் மீது வைக்காதீர்கள்.

## தேவனுடைய வார்த்தையை படிக்கும் விதம்

1. திறந்த மனதுடன் படிக்க வேண்டும் (அப். 17:11; 2 பேதுரு 3:2)
2. ஆவிக்குரிய சிந்தையுடன் படிக்க வேண்டும் (கொலோ. 1:9; யாக். 1:8)
3. சத்தியத்தை அறியும் ஆசையுடன் படிக்க வேண்டும் (சங். 119:11,103)
4. தேவனுடைய வழி நடத்துதலுக்காக ஜெபிக்கும் மனப்பான்மையோடு படிக்க வேண்டும் (யாக். 1:5; 3:15).
5. வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்கிற எண்ணத்தோடு படிக்க வேண்டும் (2 தீமோ. 3:16,17).

# ஆராதனையும், பொழுதுபோக்கும்

***Bro. Harvey Porter***

நம் சமுதாயம் பொழுதுபோக்கிற்குள் மூழ்கிக் கிடக்கிறது. நாம் மிக வேகமான, பரபரப்பான சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், கவலைகளிலிருந்தும், அழுத்தங்களிலிருந்தும் விடுதலை பெற விரும்புகிறோம். நாம் பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடும் போது பிரச்சனைகளை நாம் மறக்கிறோம். நாம் விளையாட்டுப் போட்டிகளை காணச் செல்கிறோம், அதிகமாக பயணங்களை மேற்கொள்கிறோம். நீண்ட நாட்கள் விடுப்பு எடுக்கிறோம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமாகப் பார்க்கிறோம். உண்மையாகவே, நம் பிரச்சனைகளுக்கும், கவலைகளுக்கும் ஒரு மாற்று தேவை. நம் வாழ்க்கையின் பல்வேறுபட்ட பகுதிகளில் சமநிலையைத் தக்க வைத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. ஓய்வு, வேலை, படிப்பு, விளையாட்டு, ஆராதனை மற்றும் பொழுதுபோக்கு என்று ஒவ்வொன்றிற்கும் போதுமான நேரத்தை ஒதுக்குவது அவசியமாயிருக்கிறது.

கடந்த பத்து வருடங்களாக பெரும்பாலான சபைகளில் அங்கத்தினர்களின் வருகை குறைந்திருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சிலர் ஆராதனையை உற்சாக மற்ற ஒன்று என்கிறார்கள். அவர்கள் ஓய்வெடுப்பதற்கும், குடும்பத் தோடு நேரத்தைச் செலவிடுவதற்கும் பொது விடுமுறை நாட்களில் மட்டுமே நேரம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் பயணங்களை மேற்கொள்கிறார்கள், மீன் பிடிக்கச் செல்கிறார்கள், விளையாடுகிறார்கள், விளையாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கிறார்கள். சிலர், எந்த சபையில் பொழுது போக்கு அம்சங்கள் இருக்கிறதோ அங்கே போய் கலந்து கொள்ள விரும்புகிறார்கள்.

இத்தகைய விருப்பங்களை நிறைவேற்றும்படி சில சபைகள் இசைக் கருவிகளை இசைக்கிறார்கள், பாடல் குழுவினரை ஏற்படுத்துகிறார்கள், கைகளைத் தட்டுகிறார்கள், கைகளை உயர்த்துகிறார்கள், இசைக்கேற்ப உடலில் அசைவுகளை ஏற்படுத்துகிறார்கள், பரவசமூட்டும்படியாக இன்னும் சில நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

தாவீதும், தேவனுடைய ஜனங்களும் உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வந்த போது, ஓர் அருமையான ஸ்தோத்திரம் பாடலைப் பாடினர். அது I நாளாகமம் 16:28,29 வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. *"ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும், வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள் கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைச் கொண்டு*

*வந்து அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்;* பரிசுத்த அலங்காரத் துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் " என்று.

ஆராதனையின் முக்கியத்துவம் ஆராதனை செய்பவரைப் பிரியப்படுத்துவது அல்ல. மாறாக, ஆராதிக்கப்படுபவரைப் பிரியப் படுத்துவது தான். தேவனுக்கு நாம் எதையாவது கொண்டு வர வேண்டும் எனக் கட்டளையிடுகிற அநேக வசனங்கள் இருக் கின்றன. இங்கே தாவீது " செலுத்துங்கள் " என்று மூன்று முறை சொல்கிறார். நாம் பெற்றுக்கொள்வதெல்லாம் நமக்குப் பரவசத்தை ஏற்படுத்த வேண்டுமென்கிற அவசியமில்லை. ஆனால், நமக்கு எல்லாவற்றையும் தந்து, நம்மில் அன்பு கூருகிற பிதாவாகிய தேவனுக்கு நம்முடைய அன்பையும், போற்றுதலையும் வெளிப்படுத்தும் போது நமக்கு கிடைக்கும் மகிழ்ச்சி உற்சாகத்தையும், உள்ளுணர்வையும் ஏற்படுத்து கிறது. இங்கே தாவீது *காணிக்கைகளைக் கொண்டு வந்து அவரு டைய சந்நிதியில் பிரவேசியுங்கள் என்று சொல்கிறார்.* " இங்கே உலகத்திலிருந்தும், நம்முடைய அன்றாட நிகழ்வுகளிலிருந்தும் நாம் வெளியே வந்து, தேவனுடைய தூய பிரசன்னத்தில் நிற்கிறோம் ". நம்முடைய கரங்களில் " காணிக்கை " இருக்கிறது. அதன் பொருள், நாம் அவருக்கு எதையாவது கொடுக்கிறோம்.


இப்படிச் செய்வது பரவசமூட்டுகிறதாயிருக்கிறதல்லவா? ஆம்! ஆனால், இந்த உலகப் பரவசம் போலல்ல. இது ஆழ்ந்த அன்பிலிருக் கும் இருவர் போன்றது. அங்கே, ஒருவர் மற்றவரிடம் தன் நேசத்தை வெளிப்படுத்துகிறார், அங்கே, ஒரு விலையுயர்ந்த பரிசு கொடுக்கப் படுகிறது. அவர்கள் இருவருக்குமிடையில் ஓர் இனம் புரியாத உணர்வு ஏற்படுகிறது, அன்பு உணரப்படுகிறது, அனுபவிக்கப்படுகிறது. இந்த உறவு இன்னும் பலப்படுத்தப்படுகிறது. அதுபோல், ஆராதிப்பவர் தேவன் மீது கவனத்தைச் செலுத்துகிறார், தன் மீதல்ல.

இவ்வகையான ஆராதனையில் அலங்காரம் இருக்கிறது. இது ஆராதிக்கிற ஒவ்வொருவருடைய மனதிலும், இருதயத்திலும் இருக்கிறது. உண்மையான " *பரிசுத்த அலங்காரத்துடனே* " தம்மை யார் ஆராதித்தார்கள் என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும்.

## நம் நினைவுகள் எப்படி இருக்க வேண்டும்?

1. நாம் நியாயமான நினைவுகளை கொண்டிருக்க வேண்டும் (நீதி. 12:5)
2. நம் நினைவுகளை அவர் தூரத்திலிருந்து அறிகிறபடியால் அவைகளைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (சங். 139:2,23).
3. எல்லா எண்ணங்களையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்து கிறவர்களாயிருக்க வேண்டும் (2 கொரி. 10:5).
4. நாம் மேலானவைகளை நாடுகிறவர்களாக இருக்க வேண்டும் (கொலோ. 3:1,2).

# புதிய வெளியீடு





**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில குறும்பாடல்கள்**

மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

---

**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 pm
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:

TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014


# எங்களது இதர வெளியீடுகள்

















சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor, S. Rajanayagam.